யிருக்கிறது. ஆகவே, ஒரு சர்க்கரை ஆலை செய்யாறு கோட்டத்தில் அமைக்க அரசு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு வகைகளிலே கோரிக்கைகள் வருகின்றன. ஆனால் எங்கே எக்னாமிகலி வயபிள்ளாக அந்த ஆலை இயங்கும் என்று கருத இடம் இருக்கிறதோ, அங்கே அமைக்க அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகங்கைக்கு அருகில் கிடைக்கும் கிராபைட் கனிமம்

*வினா எண் 643— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கைக்கு அருகில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் கிராபைட் கனிமம் கிடைக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அக்கனிமத்தை வெட்டி எடுத்து அப் பகுதியில் தொழிற்சாலை துவங்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை அருகில், கிடைக்கும் கிராபைட் கனிமத்தை கழ்ந்தெடுத்து, அதனைப் பயன்படுத்தி கிராபைட் சம்பந்தப்பட்ட உற்பத்தி பொருட்களை தயாரிக்க சுமார் 2 கோடி ரூபாய் அளவில் தொழிற்சாலை நிறுவும் திட்டம் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சிவகெங்கை பகுதியில் கிடைக்கும் கிராபைட் கனிமத்தின் மதிப்பு எவ்வளவு? அளவு எவ்வளவு? கிராபைட்டில் இருந்து பெறப்படும் உப பொருள்கள் யாவை ?

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 15 மீட்டர் ஆழத்திற்கு மொத்தம் 2.5. இலட்சம் டன் கிராபைட்டு கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. கிராபைட்டிலேயிருந்து வெப்பம் தாங்கி கருவி போன்ற பல்வேறு துணைப் பொருள்களை தயாரிப்பதற்கான திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராபைட் கனிமத்தை வெட்டி தனியார்கள் கொள்ளை லாபம் பெறுவதாக அறிகிறேன். அப்படி தனியார்கள் கொள்ளை அடிப்பதை தடுக்க, அரசே கிராபைட் கொண்டு உப தொழில்களை ஆரம்பிக்க முன் வருமா? அத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டால் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் யாரும் இதுவரை கிராபைட் வெட்டி எடுக்க அனுமதிக்கப்படவில்லை. அரசின் சார்பிலே அந்தப் பகுதிகளிலே தொழிற்சாலை நிறுவப்படுமேயானால், பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். மைனிங் போன்ற வேலைகளை முதலிலே பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராபைடு என்ற மூலப் பொருளை வெட்டி எடுத்து, அதைத் தனியாக செய்ய விருப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே அவருடைய மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது, இது குறித்து மைனிங் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் மைனிங் வேலை என்பது மட்டும் அல்லாமல், கிராபைடிலிருந்து க்ருசிபிள்ஸ் போன்ற பொருள்களை உடனடியாக மேன்னியூபேக்சர் செய்து, அதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்படியான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மானியக் கோரிக்கையின் போது நான் என்ன சொன்னேனோ, அதைத்தான் இப்போதும் சொல்கிறேன். மைனிங் என்பதில் முதற் கட்டமாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு, மைனிங் வேலை ஆரம்பிக்கப் பட வேண்டும். இந்த ஆண்டு அவ்வாறு மைனிங் செய்கிற வேலையைத் தொடங்கவும், கிடைக்கிற கிராபைட்டை வைத்துக் கொண்டு மூலத் தொழிற்சாலையையும், உப தொழிற்சாலையையும் நிறுவுவதற்கான திட்டம் பற்றி சொல்லி, அதற்கென 2 கோடி ரூபாய் கனி வள நிறுவனத்தின் மூலமாக அரசு ஒதுக்கியிருக்கிறது. மற்ற விவரங்கள் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன்.

சட்ட கல்லூரியில் பயிலும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

*வினா எண் 644—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு, விடையளிப்பாரா —